பாடம் - 3

# அல்ஹம்து லில்லாஹ்







3. S. P. C. 120268

ஸலீம் : அஸ்ஸலாமு அலைக்கும்.

தாயார் : வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹ்.

ஸலீம் : உம்மா! உம்மா! எனக்கு ஒரு பரிசு கிடைத்தது.

தாயார் : அல்ஹம்து லில்லாஹ்! மகனே எதற்காகப் பரிசு கிடைத்தது.

ஸலீம் : எந்த நாளும் பாடசாலைக்குப் போனதற்காக இந்தப் பரிசு கிடைத்தது.

நஸீரா : ஏன் உம்மா நீங்கள் அல்ஹம்து லில்லாஹ் என்று சொன்னீர்கள்?

தாயார் : ஏதாவது சந்தோசமான செய்தி கேள்விப்பட்டால் நாம் அல்ஹம்து லில்லாஹ் என்று சொல்லி அல்லாஹ்வைப் புகழவேண்டும்.

நஸீரா : உம்மா !! சாப்பிட்ட பின்னரும் அல்ஹம்து லில்லாஹ் கூறவேண்டும் தானே.

தாயார் : ஆம் மகளே, தும்மிய பின்னரும் அல்ஹம்து லில்லாஹ் என்று கூறவேண்டும்.

